# பிரபாகரன் பெயர் குற்றப் பத்திரிகையிலிருந்து நீக்கப்படும்?

(சென்னை)
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன், உளவுப் படைத் தலைவர் பொட்டு அம்மன், விடுதலைப் புலிகள் இயக்க பெண்கள் பிரிவு உளவுப் படைத் தலைவி அகிலா ஆகியோரின் பெயர்கள் குற்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 17 இதழ் 109
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30 — 05 — 1992

## சுப்பசொனிக் வீசிய குண்டுகள் நிலத்தில் விழுந்துதீப்பற்றிஎரிந்தன

(யாழ்ப்பாணம்)
வடமராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற தாக்குதலில் ஈடுபட்ட விமானப்படையின் புதிய 'சுப்பசொனிக்' விமானங்களும் பல எரிகுண்டுகளை வீசியதாக நேரில்பார்த்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த விமானங்கள் மின்னல் வேகத்தில் பறந்து குண்டு

(4ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் புலிகள் உக்கிரத் தாக்கு; 29 இராணுவத்தினர் உயிரிழப்பு!

## 6 சிப்பாய்கள் படுகாயம்!!

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகனேரிப்பகுதியில் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர்மீது நேற்று மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் 29 படையினர் கொல்லப்பட்டனர். ஆறு சிப்பாய்கள் படுகாமடைந்தனர் என அரசு நேற்று அறிவித்தது

மட்டக்களப்பிலிருந்து வாகனங்களில்வாகனேரிப்பகுதிக்கு ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவ அணியொன்றின் மீது விடுதலைப் புலிகள் மும்முனைகளிலிருந்து திடீரென தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்றதாகவும் இத்தாக்குதலின்போது 29 படையினர் கொல்லப்பட்டதாகவும் ஆறு சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். நகர் தாக்குதல் இல்லை

[கொழும்பு]
யாழ். நகர்மீது இராணுவத்தினர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் என்று கொழும்பு பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்த செய்திகளுக்கு இராணுவ அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

## மாங்குளம் பகுதியில் இராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)
வவுனியாப் பகுதியிலிருந்து மாங்குளம் பகுதிக்கு நேற்று முன்தினம் முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்கி பின்வாங்கச் செய்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் பகல் மன்னார் வீதி வழியாகவும், மதவாச்சி வீதி

(4ம் பக்கம் பார்க்க)

## 9 வீரவேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாண )
வடமராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 9 வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். அவர்கள் பெயர்கள் விபரம் வருமாறு;

லெப். இசைவாணன் அல்லது வசந்தன் (ராசலிங்கல் கணேசதாஸ், பொன்னாலை-தெற்கு), வீரவேங்கை துரோணன் (கோகுலசிங்கம் கோடீஸ்வரன், தம்பலகா

[4ம் பக்கம் பார்க்க]

## விஷமப்பிரசாரம் செய்வோர் என்னைக்கொல்லவும் சதி -ஜனாதிபதி

(கொழும்பு)
தனக்கு எதிரான விஷமப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தன்னைக் கொலைசெய்யக்கூட தயங்கமாட்டார்கள் என ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்தள என்ற இடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்

(4ம் பக்கம் பார்க்க)

## வளலாயில் கவசவாகனங்கள் வெடித்துச் சிதறின!

(யாழ்ப்பாணம்)
வளலாய் பகுதியிலுள்ள இராணுவத்தினர் நேற்று முன் தினம் பாரிய கவச வாகனங்களுடன் முன்னேறியபோது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கியதால் இரு கவசவாகனங்கள் வெடித்துச் சிதறின.

இந்த மோதலில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 44இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

தொண்டமானாறு வெளிச்சவீட்டு நிலையத்துக்கு அருகாமையிலும், கதிரிப்டாய்ப் பகுதியிலும் புலிகளின் கண்ணிவெடியில் இராணுவ வாகனங்கள் சிக்கிச் சிதறியதுடன், விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர்

(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் இழப்பு அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு)
வளலாய், கதிரிப்பாய் ஆகிய இடங்களில் ஸ்ரீலங்கா படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நேரடி மோதலில் 11 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு உயரதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர்.

## தெரிவுக்குழுவில் சுதந்திரக்கட்சியின் நிலை

(கொழும்பு)
இனப்பிரச்னைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தில் மாற்றம் எதுவும் இல்லையென மேற்படி கட்சியின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

ஆனால் இது தொடர்பாகத் தமிழ்க் கட்சிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்துவதெனச் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு

[4ம் பக்கம் பார்க்க]

## இளவாலையைச் சேர்ந்த ஐந்துபேரை விடுவிக்க படையினர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)
பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளவாலையைச் சேர்ந்த ஐவரையும் உடனடியாக விடுவிக்க முடியாது என்று கூட்டுப் படை தலைமையகம் யாழ்.அரச அதிபருக்கும் இளவாலை புனித அன்னம்மாள் ஆலய பங்குகுருவானவருக்கும் தெரிவித்துள்ளது.

இளவாலையைச் சேர்ந்தவர்களான கிறிஸ்சாந்தர் அரியரத்தினம், பிரான்கோ கிறிஸ்ரோப்பர், பிரான்சிஸ்நீக்கலஸ் அந்தோனிப்பிள்ளை மனோகரன், குழந்தைவேல் குணசேகரம் ஆகியோரை விடுவிக்குமாறு இளவாலை புனித அன்னம்மாள் ஆலய பங்குக்குரு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் "சூறாவளி ஒப்பரேஷ"னில் 4ஆயிரம்பேர் இடம்பெயர்வு

(கொழும்பு)
வடமராட்சிப்பகுதியில் இராணுவம் நேற்றுமுனதினம் மேற்கொண்ட 'சூறாவளி' ஒப்பரேஷன் தாக்குதலினால் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து புத்தூர், நீர்வேலிப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு தனியார் தொண்டர் ஸ்தாபனங்கள் 1500 ருத்தல் பாண் உட்பட சமைத்தஉணவுவகைகளை தற்போது வழங்கி வருகின்றன.

விமானக்குண்டுவீச்சினால் வீடுகளை இழந்த பெரும்பாலான குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்ல முடியாத நிலையில் இருப்பதால் இவர்களுக்கு

(4.ம் பககம் பார்க்க)

## முப்படைத் தளபதிகள் தலைமைவகித்தும் தொண்டமானாற்றில் படையினர் புலிகளிடம் தோல்வி

(கொழும்பு)
பலாலி முகாம விஸ்தரிக்கும் நோக்கில் தொண்டமானாறு பகுதியை கைப்பற்ற முப்படைகளும் நேற்று முன்தினம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அவ்வவ் படைத் தளபதிகள் தலைமை வகித்ததாகவும் இதனை புலிகள் முறியடித்தமை படையினர் தரப்பில் அதிர்ச்சியூட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை நடாத்தவென இராணுவத் தளபதி

(4ம் பக்கம் பார்க்க)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




வீரப் பிறப்பு: 14 - 09 - 1960

வீரச் சாவு: 30 - 05 - 1991

# மேஜர் சுருளி

(கந்தசாமி சிறிதரன்-சுதுமலை)

[எதிர்பாராத வெடிவிபத்தில்]



தமிழருக்கு விடிவு ஒன்று
விரைவினிலே உண்டு என்று
கழுத்தினிலே விடம் ஆட
களத்தினிலே நீ ஆட
நகர்ந்த பல நாட்கள் உண்டு
விடிவிற்காய் நீ கொண்ட
வெடிகுண்டு தானொன்று
வீழ்த்தியதோ உனை அன்று
வீரன் நீ வீழ்ந்து விட்ட
ஓராண்டு பூர்த்தியிலே
களமாட விறுகொண்டு
வேங்கையராய் நாமுண்டு
புதியதொரு வரலாற்றில்
புலிவீரா நீ உண்டு

சுதும

வடக்

மானிப்ப

(சி.6359

## 23 ஆயிரம் அகதிகள் இலங்கை திரும்பினர்

(சென்னை)

தமிழ்நாட்டில் மொத்தம் 1 லட்சத்து 53 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளதாகவும் இவர்களில் இது வரை 23 ஆயிரத்து 123 பேர் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மாநில வருவாய் சிறப்பு ஆணையாளர் திரு. பி எம். இராமதாஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஏனையவர்களும் படிப்படியாக விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (மா)

## யாழ்.-முல்லைதீவு-மணலாறில் எட்டு படையினர் உயிரிழப்பு

### 32 இராணுவம் படுகாயம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளுடனான உக்கிர மோதலில் 8 படையினர் கொல்லப்பட்டதாக அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது. இம் மோதல்களில் 32 படையினர் படுகாயம் அடைந்தனராம்.

யாழ். குடாவில் புலிகளின் நிலைகள் மீது முப்படைகளும் தாக்குதல் நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 4 படையினரும், முல்லைத்தீவிலும், மணலாறிலும் தலா இரண்டு படையினர் பலியானதாகவும், முல்லைத்தீவில் 20 படையினர் படுகாயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசு கொள்வனவு செய்த புதிய 'சுப்பசோனிக்' யுத்த விமானமும் முதல் தடவையாக யுத்தத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தனிச் சிங்களத்தில் அனுமதி அட்டை

(பண்டத்தரிப்பு)

மருந்துக் கலவையாளர்கள் தரம் மூன்றுக்கான வினைத்திறனைகாண் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை கொழும்பிலுள்ள களுபோவில அரசினர் வைத்தியசாலையில் எதிர்வரும் 3ம் திகதி நடைபெறவுள்ளது

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தில் உள்ள மருந்துக்கலவையாளர்களுக்கு தனிச் சிங்களத்தில் அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் யாழ். மாவட்டத்தில் பல திணைக்களங்களுக்கும், அரச அலுவலகங்களுக்கும் தனிச் சிங்களத்திலேயே சுற்றுநிருபம் அனுப்பப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (72)

## வாகன விபத்து

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு முத்திரைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எஸ்.சிவா (24வயது), எஸ். தங்கவேல் (31வயது) ஆகிய இருவருமே சுய நினைவிழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் குடாநாட்டின் பல்வேறுஇடங்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களால் 10 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். (56)

## ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வளலாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில், புலிகளால் ரி-56 2 ரகத் துப்பாக்கி-1, ஐ எம் ரவை-300, ஒரு சோடி சப்பாத்து, தலைக்கவசம்-1, கிட்பாக்-1 ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## ரூ.1 கோடி 20 லட்சம்

### வடபகுதிக்கு ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினுல் இந்த ஆண்டு வட மாகாணத்திலுள்ள மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கு மூலதன வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒரு கோடி 20 லட்சத்து 84 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், உள்ளூராட்சி மன்றங்களின் பிரமாணங்களின் அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டங்களைத் தயாரித்து அனுப்பிவைக்குமாறும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக தலைமைச் செயலாளர் திரு. சோ. கணேசநாதன் சுற்றுநிருபம் அனுப்பிவைத்துள்ளார். (137)

## அழகியற் பாடத்திற்கான செய்முறை பரீட்சை

(வட்டுக்கோட்டை)

1990, 1991ம் ஆண்டுகளுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சையின் அழகியற் பாடத்திற்குத் தோற்றி எழுத்துப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான செய்முறைப் பரீட்சை ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மேற்படி பரீட்சார்த்திகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினுல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பின்வரும் ஆவணங்களைக் கொண்டுவருதல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

0 செல்லுபடியாகும் ஆள் அடையாள அட்டை.

0 கையொப்பத்தை உறுதிப்படுத்திய பிரவேச அட்டை.

0 இப் பரீட்சைக்குப் படித்த பாடல்களின் அட்டவணை. பாவிக்க விரும்பும் சுருதிவாத்தியக் கருவி.

0 வாய்ப்பாட்டிலேயே பரீட்சை நடைபெறும். வாத்தியம் இசைக்க விரும்புவோர் அப் பாடல்களை வாயால் பாடத் தெரிந்திருத்தல் மிக அவசியம்.

0 பரதநாட்டியத்திற்கேற்ற உடை என்பனவாகும். (139)

## இந்திய ராஜதந்திரி ஆஸ்பத்திரியில் அனுமதி

(புதுடில்லி)

மிகமோசமான உடல் நிலையுடன் பாகிஸ்தானிலுருந்து இந்தியா அழைத்துவரப்பட்ட ராஜதந்திரி திரு. ராஜேஸ் மிட்டல் டில்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திரு. மிட்டலின் பெற்றேர் உட்பட அவரது குடும்பத்தவர்களும் பாகிஸ்தானிலிருந்து திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

திரு மிட்டலை அழைத்துவர விஷேச விமானம் இறங்க முதலில் அனுமதி மறுந்த பாகிஸ்தான் பின் அனுமதி வழங்கியதும் தெரிந்ததே. (சி)

## "நாட்டுக்காக உயிரை அர்ப்பணிக்கத் தயாராகஇருக்க வேண்டும்"

— பேராசிரியர் பாலசுந்தரம்

(வட்டுக்கோட்டை)

"நாட்டுக்காக அனைவரும் உழைக்கவேண்டும். அதற்காக உயிரையே அர்ப்பணித்தாலும் பரவாயில்லை என வாழ்ந்த விபுலானந்த அடிகளார் போர் அணியில் சேர்ந்து பயிற்சிபெற்று இரண்டு நாள் கடற்கரையில் காவல்புரிந்துகொண்டு இருக்கும்போது முதலாவது உலக மகாயுத்தம் நின்றுவிட்டது. சமூகத்தின் - நாட்டின் மீட்பாளனுகத் திகழ்ந்த விபுலானந்த அடிகளார் எதற்கும் அஞ்ஞாத நெஞ்சம் படைத்தவர். தென் தமிழீழ மக்களின் எழுச்சிக்கு மூலகாரணமாகத் திகழ்ந்த விபுலானந்தர் பெரும் கவிஞர் முதுதமிழ்ப் புலவர் திரு. மு. நல்லதம்பிக்கு எழுதிய கடிதத்தை சகலரும் படிக்கவேண்டும்"

யாழ். மாநகரசபையினர் நடத்திய விபுலாநந்த அடிகளாரின் நூற்றுண்டு விழாவில் சிறப்புரையாற்றிய யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் இவ்வாறு கூறினர்.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு. பாலசுந்தரம் கூறியதாவது:

விபுலானந்த அடிகளார் சமூகசீர்திருத்த ஆயுதமாக கல்வியைப் பயன்படுத்தினர். அடிநிலை மக்களின் - ஏழை மக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஏராளமான மொழிபெயர்ப்புக்களைச் செய்தவர்.

சாதிக் கொடுமையை வன்மையாக எதிர்த்த இவர் தான் ஆசிரியராக இருந்தகாலத்தில் செயற்படுத்த முடியாதிருந்த எத்தனையோ கொடுமைகளையெல்லாம் துறவியானபின் அவற்றுக்கெல்லாம் தகுந்த பதிலடி கொடுத்தவர் விபுலானந்தர் ஆறுமுகநாவலரது கண்டனத்துக்கும் விபுலானந்தரது கண்டனத்துக்கும் வித்தியாசமுண்டு.

'உயிர்வாழ உழைப்பு' என்ற கட்டுரையில் சகலரும் தமக்குத் தேவையான தொழிலைக் கற்றுக்கொண்டால சாதிமுறை ஒழியும் என்றும் தொழில் கல்வியை சகலரும் தவருது கற்கவேண்டும் என்றும் கூறியிருக்கிருர்.

வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர் திரு. அம்பிகைபாகன் வெளியிட்ட 'விபுலானந்தர் உள்ளம்' என்ற நூலின் கடைசிப் பக்கத்தில் முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பிக்கு எழுதிய கடிதம் ஒன்று உண்டு. அதைச் சகலரும் தவருது வாசிக்கவேண்டும். ஆய்வுசெய்யவேண்டும். அவ்வளவுக்கு ஏராளமான சீர்திருத்தக் கருத்துக்கள் அதில் பொதிந்துள்ளன என்ருர். (139)

## நியமனங்களை நிறுத்துமாறு அரசுக்கு மகஜர்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தினுள்ள அரச இலாகாக்களில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை தற்போது நிரப்பும் வேலைகளை உடனடியாக நிறுத்திவைக்கும்படி ஜனதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு மகஜர் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினுல் இடம்பெயர்ந்து தாம் கொழும்பில் வசிப்பதினுல் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ் நகரில் நடைபெறும் பரீட்சைகளை நிறுத்திவைக்குமாறும் நிலமை சீரடைந்த பின்பு இப்பரீட்சைகளை நடாத்தினுல், தாமும் பங்குபற்றுவதற்கு ஏதுவாக இருக்குமென்று யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கொழும்பில் வசித்துவரும் சில இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து மேற்படி மகஜரை ஜனதிபதிக்கு அனுப்பியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்த விளக்கத்தை அரச அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு வெற்றிடங்களை நிரப்பும் வேலையைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படி அரச அதிபருக்கு வலியுறுத்தப்பட்டதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன (வி)

## தாவரங்கள், விலங்கினங்களை பாதுகாக்க புதிய சட்டம்

(கொழும்பு)

தாவரங்களையும், விலங்கினங்களையும் பாதுகாப்பதற்கான புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன

இதன்பிரகாரம் இயற்கைவன பாதுகாப்பு இடங்களில் தாவரங்களுக்கும், விலங்கினங்களுக்கும் பாதிப்பை உண்டு பண்ணும் வகையில் எவரும் நடந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது

குறிக்கப்பட்ட பகுதிகளில் எந்த ஒரு விலங்கினமும் வேட்டையாட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் இந்த பகுதியில் தாவரங்களுக்குச் சேதம் விளைவிக்கவும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் இதே பகுதியில் தாவரங்களுக்குச் சேதம்விளைவிக்கவும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இயற்கை பாதுகாப்பு இடம் அமைந்துள்ள ஒருமைல் சுற்று வட்டாரத்தில் உல்லாச பிரயாண ஹோட்டல்களை நிறுவுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

யானைத்தந்தங்கள், யானைத் தந்தங்களில் செய்யப்படும் பொருள்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதற்கும்புதிய சட்டத்தின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது. (ரி)

## சரசாலையில் நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின்கீழ் இயங்கும் சரசாலை பொது நூலகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஜூன் மாதம் 2ம் திகதி தொடக்கம் 15ம் திகதிவரை நூலக வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

மேற்படி நூலக அபிவிருத்திச் சபையினுல் நடாத்தப்படும் இந்நூலக வாரத்தில் நூலக பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று நூல்கள் சேரிக்கப்படவுள்ளன.

## 42 லட்சம் மாணவர்களுக்கு அறுபது கோடி ரூபா செலவில் சீருடைகள் வழங்கப்படும்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 42 லட்சம் மாணவர்களுக்கு அடுத்த வருடம் முதல் இலவச சீருடைகள் வழங்கப்படவுள்ளது சீருடைகள் வழங்குவதற்காக அரசின் தீர்மானத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது சுமார்அறுபதுகோடிரூபா இலவச சீருடைகளுக்காக செலவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

யாழ்ப்பாணம்


## வரி விளம்பரம்

### மீரா பிரசுரங்கள்

சற்பனையின் இனிய கனவு களன்று, காலத்தை பிரதிபலிக்கும் கதைகள். சமுதாயப் பிடிப்புள்ள கதைகள். யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி புத்தகசாலைகளில் விற்பனையாகிறது. (சி 63 5)

### பாலாஜி புத்தகசாலை

ரமணிச்சந்திரன், லக்ஷ்மி, கண்ணதாசன் நாவல்கள் மற்றும் பிறந்தநாள் வாழ்த்து மடல்கள் விற்பனைக்குண்டு 15% சழிவு வழங்கப்படும். 15/5, 27, மின்சார நிலைய வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (எ 2166)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

**94 ஒளியியல்**

SAT. & SUN.

12-00—1-00

ஆரம்பம்: 30-5-92

(இன்று)

Mr.

ஜெயசீலன்

B. Sc. (Hons)

**'A' Level Centre**

Point Pedro Road

1st Lane Jaffna

(ஏ 2165)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


# கூட்டுறவுச் சங்க புதிய திருத்தச் சட்டம்

(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் திகதி சகல நிர்வாக சபை உறுப்பினர்களும் தமது மனைவி மக்களினதும் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பான பிரகடனம் ஒன்றைச் செய்து கூட்டுறவு ஆணையாளருக்கு தமது நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுறவுச் சங்கத் திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் வருமாறு:

கூட்டுறவுச் சங்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் இனிமேல் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபையில் இடம்பெறலாம்.

இரு சங்கங்கள் ஒன்றிணைவதற்கு அல்லது ஒரு சங்கம் பல கூறுகளாவதற்கு சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் சமுகமளித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குப் பெறப்படல் வேண்டுமென்ற விதி தளர்த்தப்பட்டு சங்கத்தின் மொத்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் சாதகமாகப் பெறப்படல் வேண்டும்.

பங்கு ஒன்றின்பெறுமதி இதுவரை வரையறுக்கப்படாமல் இருந்தது. இப்பொழுது பங்கொன்றின் பெறுமதி 100ரூபா என விதிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச்சங்கம் ஒன்றைப் பதிவு செய்யுமாறு விண்ணப்பிக்கும் அங்கத்தவர்களும் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யக்கூடிய அங்கத்தவர்களும் பங்குப்பணத்தைச் செலுத்தியவர்களாக இருக்க வேண்டும்

நாடாளுமன்ற அங்கத்தவர், மாகாணசபை அங்கத்தவர், முனிசிப்பல் சபைஅங்கத்தவர், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியாது. இப்போதுஇவ்வாறு நிர்வாக சபையில் இருப்பவர்கள் தொடர்ந்து இப்பதவிகளையும் வகித்துக் கொண்டு நிர்வாக சபையிலிருக்கமுடியாது.

ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படாத ஸ்தாபனங்களும் கூட்டுறவுச் சங்கத்தில் முதலீடு செய்யலாம்.

மேலும் பல திருத்தங்கள் கூட்டுறவு ஆணையாளரினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. (சு)

# பல்கலைக்கழக முடிவுக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்தத்தில் உயர் பட்டப்படிப்பு சற்கைநெறியினை ஏற்படுத்தியமைக்காக யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தை சைவசித்தாந்த பாதுகாப்புச்சேவை பாராட்டியுள்ளது.

மேலும் பண்ணிசைக்குத் தனித்துறை ஏற்படுத்துவதையும் வரவேற்றுள்ளது.

# கிரிக்கெட் இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

'ஷப்ரு' வெற்றிக் கிண்ணத்திற்காக 'ஜொலி ஸ்ரார்ஸ்' நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம், நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்

இப்போட்டியில் 'ஷப்ரு' அணியை எதிர்த்து ஜொனியன்ஸ்' அணி மோதுகிறது. இந்த ஆட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாக அமையும். (சி)

# ஊழியர் பற்றுக்குறை வங்கி வேலைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் வங்கிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பாததினால் வங்கிகளின் அன்றாட கருமங்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவங்கிகளின் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

முன்னர் இங்கு கடமையாற்றிய ஊழியர்கள் பலர் லீவில் கொழும்புக்குச் சென்று தற்போது அங்குள்ள வங்கிகளில் வேலை செய்வதினால் இங்குள்ள வங்கி வேலைகள் பெரிதும் பாதிப்படைந்ததுடன், வங்கிகளுக்கு வரும் பொதுமக்களும் இங்கு நீண்டநேரம் காத்திருந்து தமது கருமங்களைச் செய்யவேண்டியுள்ளது.

இலங்கை வங்கியில் அதிகளவிலான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதை உடனடியாக நிரப்பும்படி பல தடவைகள் மேலிடத்துக்குத் தெரிவித்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

# பத்திரிகையாளர் ஒய்வூதியதிட்டம்

[கொழும்பு]

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது.

பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் ராஜாங்க, தகவல்துறை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவை சந்தித்தபோதே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

இத்திட்டத்திற்கான நகலை ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சே)

# இராசிபலன்

30 05 1992

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 17)

[திரயோதசி ந. ப. 12-12 வரை, பரணி மு. இ. 9-49 வரை, சித்தாமிர்தயோகம், இராகுகாலம் காலை 8-52 முதல் 10-22 வரை. சுபநேரம் பகல் 2-52 முதல் 4-22 வரை.

மேடம்- தொழில ஆதாயம், பணவரவு, வெற்றி வாய்ப்பு.

இடபம்- குடும்பத்தில் குழப்பம், காரியதாமதம், அசதி.

மிதுனம்- புதிய தெம்பு, தொழில் மூலதனம், குடும்ப சுகம்.

கடகம்- வாழ்க்கைச்சுகம், இனசன மகிழ்ச்சி. சகோதர உதவி.

சிங்கம்- பெண்களால் அவமானம், உடல் உபாதை வெறுப்பு.

கன்னி- விவகாரம், அதிக தொல்லை, மனவேதனை.

துலாம்- எதிர்பாராத லாபம், சுபகாரியம், தெய்வ வழிபாடு.

விருச்சிகம்- புத்திரர் நன்மை குடும்ப மகிழ்ச்சி பாராட்டு.

தனுசு- மரியாதைக் குறைவு, மறைமுக எதிர்ப்பு, செலவு.

மகரம்- குடும்ப செலவு, தவறானசெயல், கண்வலி.

கும்பம்- புதிய நட்பு, வேலைப்பளு, காரிய சித்தி.

மீனம்- பெரியோர் கோபம், தொழில்பகை, அகால போசனம்.

— ஜே ஸ்யர்

# குண்டு வைத்தவர்களை கண்டுபிடிப்பதற்கு தனிப் பொலிஸ் படை

(சென்னை)

கும்பகோணம் தொலைக்காட்சி நிலையத்தில் குண்டு வைத்தவர்களை கண்டுபிடிக்க தனியான பொலிஸ் படை அமைக்கப்பட்டுள்ளது,

குண்டு வெடித்த இடத்தை நேரில் பார்வையிட்ட திருச்சி உளவுப் பொலிஸ் அத்தியட்சகர் ஹாசிம் இப்படை அமைக்கப்பட்டிருப்பதை தெரிவித்ததோடு புலிகள் இயக்க ஆதரவாளர்களான புரட்சிகர இளைஞர் படையினர் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகம் தெரிவித்தார்.

இக்குண்டு வெடிப்பு சம்பந்தமாக தொலைக்காட்சி நிலைய காவற்காரர் உட்பட 30 பேரிடம் பொலிசார் இதுவரை விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கே)

# கைத்தறி பற்றிய மதிப்பீடு

(பண்டத்தரிப்பு)

புடவைக் கைத்தொழில் திணைக்களம் கைத்தறி பற்றிய மதிப்பீடு ஒன்றை நாடு முழுவதும் நடத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் எதிர் வரும் யூன் மாதத்தில் கைத்தறி பற்றிய மதிப்பீடு, கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் தங்கள் பிரிவில் தற்போது செயற்படும் கைத்தறிகள் பற்றியும், மூடப்பட்டிருக்கும் கைத்தறி நிலையங்கள் பற்றிய விபரத்தையும் சேகரித்து அனுப்பி வைக்குமாறு பிரதேசச் செயலாளர் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

# பொங்கல்

(கொழும்புத்துறை)

நல்லூர் வடக்கு அண்ணமார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று 30-ம் திகதி சனிக்கிழமை இரவு விஷேச அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். [154]

# பழைய மாணவர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

வட்டு. இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறும்.

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு, சரஸ்வதி அறவழிப் பாலர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி, நாளை ஞாயிற்றுக்கிழமை செல்வி ஜ. சுகந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் கே. பி. அரவிந்தன் இப்போட்டி நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

# மீண்டும் ராமராவ் தலைவராக தெரிவு

(பங்களூர்)

தெலுங்குதேசம் கட்சியின் தலைவராக கர்நாடகத்தின் முன்னுள் முதலமைச்சர் என். டி. ராமராவ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஹைதராபாத்தில் நடைபெற்ற தேர்தலிலேயே மேற்படி தெரிவு இடம்பெற்றுள்ளது. (க)


**ஷப்ரு கிண்ணத்துக்காக**

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்

கிரிக்கெட் போட்டித் தொடர்

இறுதியாட்டம்

**ஷப்ரு** அணி எதிர்

**ஜொனியன்ஸ்** அணி

நாளை யாழ். இந்து மைதானத்தில்!

(எ-2184)


# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

[அரியாலை]

ஒஸ்கா விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பின்வரும் அணிகள் விளையாடுகின்றன.

சென் ஹேக் [பி] அணி எதிர் கலைவாணி, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் கிறீன் பீல்ட், கோண்டாவில் குமரன் மைதானத் விளையாட்டுகள் நடைபெறும். [59]


வெய்யிலின் உஷ்ணத்திலிருந்து விடுதலை பெற்று சுறுசுறுப்பாக இயங்க வாங்கிப் பாவியுங்கள்

**MIXED FRUIT CORDIAL**

மாம்பழம், பப்பாசிப்பழம், அன்னாசிப்பழம், எலுமிச்சம்பழம் ஆகியன கொண்டு தயாரிக்கப்பட்ட TASTYயின் மற்றும் ஒரு உன்னத தயாரிப்பாகும்.

750 M L போத்தலின் விலை

ரூபா 75/- மட்டுமே.

**TasteLine Industries PvtLtd**

No. 14, Seenier Lane, Jaffna.

குறிப்பு:- 1 பங்கு கோடியலுக்கு 4 பங்கு நீர் சேர்த்து பாவிக்கலாம்,

(ஏ-2168)

**பழைய மாணவர் சங்கம்**

யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி

மேற்படி சங்க விசேட பொதுக்கூட்டம் 13-06-92 சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் 05-06-92-க்கு முன்பு அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

க. சிவபாதசுந்தரம்
அதிபர்.


யா/டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

[ஏ 2185]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு:

13 - 03 - 1967



அந்நியப்படையால் அழிப்பு:


15 - 10 - 1988

# வீரவேங்கை ரதி

(கந்தசாமி ரதிதரன் - சுதுமலை)

[இந்திய இராணுவத்துடனான மோதலில்]

அண்ணன் களம் சென்றான்
அவன் பின்னே இவன் சென்றான்
ஆடு களம் மீதினிலே காலம் பல கழித்தான்
ஆற்றல் பல பெற்றான் எமை
அழிக்க வந்த பகை அழித்தான்
காதினிலே பூ வைக்க
பாதியிலே வந்த பாரத படையதனை
தேதிகள் பல வைத்துமே
பாதி அழித்திட்டான்
தேடி உன்னை அழிப்பதற்கு
ஓடி வரும் படை எல்லாம்
வாடியே செல்வது
வடிவான காட்சியடா
நாடியே வந்த சில நயவஞ்சகர்
கூடியே இருந்து உனைக்கொன்றது
கொடுமையிலும் கொடுமையடா
சுதுமலை பெற்றெடுத்த சுதந்திர வீரா
எது விலை ஈடாகும் உனக்கு நாம்தர..



குடும்பத்தினர்

ல
து,
ாய்
)

# ஒரு கோடி ரூபா வெளிநாட்டு கரன்ஸிநோட்டு கடத்தல் முயற்சி முறியடிப்பு!

(கொழும்பு)

ஒரு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக்களைக் கடத்தும் முயற்சி ஒன்று நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் முறியடிக்கப்பட்டது.

கடலுணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவரும் கொழும்பிலுள்ள மிகப் பிரபல்யம் வாய்ந்த நிறுவனம் ஒன்றே மேற்படி மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக சுங்கப் பகுதியினர் தெரிவித்தனர்.

சிங்கப்பூர் நிறுவனமொன்றுக்கு விலாசமிட்டு அனுப்பப்பட்ட கடல் உணவுப் பொதிக்குள் அமெரிக்க டொலர், சிங்கப்பூர் டொலர் ஸ்ரேர்லிங் பவுண் நோட்டுக்கள் பெருமளவு இருக்கக் காணப்பட்டதாகவும் செல்வாக்குமிக்க இந்த வர்த்தக ஸ்தாபனம் இக்கடத்தல் மோசடியில் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (வி)

## இளவாலையைச்சேர்ந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் இளவாலை பொதுமக்களும் அரசிடம் மகஜர் மூலம் கேட்டதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் இந்தபதிலை தெரிவித்துள்ளது.

எனினும் மேற்படி விடயத்தை பரிசீலனையில் எடுப்பதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (மா)

## தெரிவுக்குழுவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் இனத்தை இழிவுபடுத்தும் கருத்துக்கு நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரவும் மேற்படி கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. (மா)

## வடமராட்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய முகாம்களைத் திறப்பதென நேற்று தனியார் தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகளிடையே நடைபெற்ற அவசரகூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

தமது சொந்த இடங்களுக்கு தற்போது திரும்பிச்செல்லும் மக்களின் நிலைமைகளையும் திரும்பமுடியாத மக்களின் இடங்களையும் நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இன்று அங்கு செல்லவுள்ளனர். (வி)

## முப்படைத் தளபதிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளன்ஸி பெர்ணண்டோ ஏயர்மார்ஷல் சிறில் குணவர்த்தன ஆகியோர் இப்பகுதிக்கு சில தினங்களுக்கு முன்பே வந்து திட்டமிட்டதாக அரசு தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

பெருமளவு தரைப்படையினர் விமான, கடற்படை உதவியுடன் முன்னேற முயன்றபோதும் இதனை புலிகள் முறியடித்துவிட்டனர். தற்போது பலாலிப் பகுதியில் மூன்று தளபதிகளும் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## சிகரட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 28-ம் திகதி நள்ளிரவில் இருந்து சகல விதமான சிகரட் வகைகளும் 10 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (59)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் 3-ம், 4-ம் இடத்திற்கான தெரிவு ஆட்டம் இன்று மாலை 3-30 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் அளவெட்டி விஞயகர் அணியை எதிர்த்து சுன்ஞகம் ஸ்கந்தா அணி மோதும்.

## இதுவரை அனுமதி இடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபருக்கு அரசினுல் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது [மா]

## விஷமப் பிரசாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்: என்னைக் கொலை செய்வதன் மூலமாக மட்டுமே அவர்கள் வெற்றியாளர்களாக முடியும். எனினும் இந்த சதிகாரர்கள் பொதுமக்களை கொல்வதற்கு நான் இடம்கொடுக்க மாட்டேன். (மா)

# மக்களின் பிரச்னைகளை தீர்க்கவேவவுனியாவந்தேன் -ஜனதிபதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிக்கு நான் விஜயம் செய்திருப்பது இப்பிரதேசத்தை கைப்பற்றுவதற்காக அல்ல. இப்பிரதேச மக்களின் பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்காகவே.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஜனதிபதி இடம்பெயர் சேவை நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்திய ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்—

தமிழ்—சிங்கள இனங்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள், தப்பபிப்பிராயங்கள் மற்றும் தவருன பிரச்சாரங்களினுல் இரு இனங்களிடையேயும் பூரண அமைதியை நிலைநாட்ட முடியாமல் உள்ளது.

எனினும் பேச்சுவார்த்தை, கருத்தொற்றுமை ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்க்க ஐ. தே. க. அரசு முயன்று வந்திருக்கின்றது.[க]

## இலவச உணவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, வலி-கிழக்குப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படையினரின் தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருவாரத்திற்கு இலவச உலர் உணவு வழங்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் நேற்று உடுப்பிட்டி. பருத்தித்துறை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்களை பணித்துள்ளார். (மா)

## வளலாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது முயற்சிக்களை கைவிட்டு பெரும் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## பிரபாகரன் பெயர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றப் பத்திரிகையிலிருந்து நீக்கப்பட இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மூவரும் இதுவரை கைது செய்யப்படாமல் இருப்பதனுல் இறுதியாகத் தயாரிக்கப்பட இருக்கும் குற்றச்சாட்டுப் பட்டியலிலிருந்து இவர்களின் பெயர்களை நீக்கி வழக்கு முடியும் வரை தனியாக வைக்கப்படுமென்றும், பின்னர் இவர்கள் எப்போது கைது செய்யப்படுகின்றுர்களோ அப்போது இவர்கள் மீது தனியாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடாத்தப்படுமென்றும் கூறப்படுகின்றது.

இதே நேரம் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இறந்துபோன 12 பேரின் பெயர்களும் குற்றப் பத்திரிகையில் இருந்து நீக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நல்லையா

சுப்பிரமணியம் நல்லையா புளியங்கூடல் மகாமாரி ஆலய பரிபாலகர் அமரர் த. சுப்பிரமணியம் சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புமகனுன நல்லையா அவர்கள் 29-05-92 வெள்ளி கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

109/3, யாழ். ஆஸ்பத்திரி வீதி.
கொட்டடி.

[சி- 6368]

# ஜெயலலிதாவை மதிக்கத்தவறியவரின் கார் நொருக்கப்பட்டது

(சென்னை)

கோவையில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பெயரை முதலில் குறிப்பிடாமல் மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் பெயரை குறிப்பிட்டதால் தமது கார் அடித்து நொருக்கப்பட்டதாகவும் தம்மைக் கொலைசெய்யசதிநடைபெற்று வருவதாகவும் இந்திரா காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் ஏ. கே. சுப்புசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழகத்தில் இனிமேல் இந்திரா காங்கிரஸ் — அ. தி. மு க.கூட்டு அதிகநாள் நீடிக்க மாட்டாது என்றுர். [க]

## மாங்குளம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ழியாகவும் மாங்குளம் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளின் எதிர்தாக்குதல்களை சமாளிக்கமுடியாது மீண்டும் முகாம்களுக்குள் பின்வாங்கிச் சென்றனர்.

முகாம்களுக்குள் சென்ற இராணுவத்தினர் பின்னர் அங்கிருந்து இடைவிடாது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. (வி)

## சுப்ப சொனிக்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களை வீசியதாகவும் விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகள் நடுவானில் வெடிக்கும் ஓசை கேட்ட சில விஞடிக்குள் ஒரே நேரத்தில் பல குண்டுகள் நிலத்தில் விழுந்து வெடிப்பதை கண்டதாகவும் இக்குண்டுகள் விழுந்து வெடித்த இடங்கள் அனைத்தும் பற்றி எரிந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். (வி)

## 9 வீரவேங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மம்), வீரவேங்கை தங்கப்பன் அல்லது கேதீஸ் (பொன்னையா திருலோகநாதன், சரசாலை), வீரவேங்கை ஆவுடையான் அல்லது ஆனந்தன் (சிவகுரு குகனேந்திரன், நவாலி-தெற்கு) வீரவேங்கை சிவகுமாரன் (சர்வானந்தம் ஜெயானந்தம், வளலாய்), வீரவேங்கை பவளன் (மகேந்திரராசா நந்தகுமார் தொண்டமனுறு), வீரவேங்கை விவேகன் (பாஸ்கரன் சிவநேசன்-அளவெட்டி) வீரவேங்கை இலக்கியன் (சிவராசபிள்ளை புஷ்பானந்தன், கட்டுடை), வீரவேங்கை வீரச்செல்வன் அல்லது வதனன்.

மேற்படி 9 போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

6 போராளிகளின் புகழுடல்கள் மக்களின் இறுதி அஞ்சலிக்காக நேற்று பி. ப. 3 மணியிலிருந்து 5 மணி வரை ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தன. பெரும்தொகையான மக்கள் போராளிகளின் புகழுடல்களுக்கு கண்ணீர் அஞ்சலிசெலுத்தினர். (வி-56)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தையா

(காரைநகர்)

காரைநகர் தன்னையை பிறப்பிடமாகவும், சித்தன் கேணி டச்சு ரேட்டில் வசிப்பவருமாகிய வேலுப்பிள்ளை கந்தையா 25-5-92 வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற காசிநாதர் வேலுப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மார்க்கண்டு சுந்தரம்மா, இளைப்பாறிய ஆசிரியர் காசிநாதன் ஆகியோரின் சகோதரரும், சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), சிவபாலன், சிவராசா, தவமணி, சிவலட்சுமி, காலஞ்சென்ற சிவபாக்கியம், சிவயோகபதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவஞானத்தின் பெரியதந்தையும், பாலசுப்பிரமணியம் (மார்க்கண்டு அன் சன்ஸ், கிளிநொச்சி), கணேசன், ராசரத்தினம் (ஜேர்மனி), சரஸ்வதி, சாம்பவி (U. K.), புனிதவதி ஆகியோரின் மாமனும், ராமநாதன், மயில்வாகனம் (மார்க்கண்டு அன் சன்ஸ் வவுனியா), அன்னம்மா, பாக்கியம், செல்லம்மா, தையல்நாயகி ஆகியோரின் மாமனுரும், மார்க்கண்டு, செல்லாச்சி, சதாசிவம், தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரன் (U.K ), மகேஸ்வரன், யோகேஸ்வரன், யோகேஸ்வரி, புவனேஸ்வரன், தேவப்பிரியா, கிஸ்ணப்பிரியா, தமிழினி, தனுசா, நந்தினிதேவி, சிவனேஸ்வரன், சுகந்தி, சிவரஞ்சன், சிவகரன், சிவகலநாதன், சிவானந்தன் ஆகியோரின் பேரனுமாவர். அன்னரின் ஈமக்கிரியைகள் டச்சு ரேட் இல்லத்தில் 31-5-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர் உறவினர் நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. காசிநாதன்
[சகோதரன்]

டச்சு ரேட்,
சித்தன்கேணி.

(சி- 6367)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81